# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை-27

பண்பாட்டுக் கழக வெளியீடு (உறுப்பினர்களுக்கு மட்டும்) பதிவு: 135/83



மெய்ஞ்ஞானக்கொடி



11-வது பதினெண் சித்தர் பீடாதிபதி



**அருள்மிகு தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் அவர்கள்**

(ஒன்பது முனீசுவரர்களில் முதல்வராகவும் மூத்தோராகவும் பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் போற்றப்படுகின்றார்.)

வெளியீடு: 27-3-86

காணிக்கை: ரூ. 1-00

# இந்துமதம் பற்றிய தவறான கருத்துக்களுக்குக் கண்டிப்பு, திருத்தம்!

பகீரதன், ஆசிரியர் ஓம் சக்தி, 1985 டிசம்பர் மாத இதழில் 'ராஜாராம் மோகன்ராய்' என்ற தலைப்பில் (பக்கம் 32 to 37) எழுதியுள்ள கட்டுரையில் இந்து மதம் பற்றிய தவறான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

பக்கம் 32: 1. ''வைதீகம்'' என்ற சொல் வேதம் என்பதிலிருந்து பிறந்தது. வைதீக மதத்தைத் தீவிரமாக அடியோடு எதிர்த்துக் கண்டித்த பவுத்தமும் இந்நாட்டில் வாழவில்லை. அரைகுறையாக எதிர்த்த சமணமும் பரவவில்லை''.

2. '' ஆனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதைத் தழுவிக் கொண்ட சைவமும் வைணமும் நன்கு பரவிவிட்டன''

**மறுப்பு விளக்கம்** இங்கு வேதம் என்ற சொல்லால் ஆசிரியர் பகீரதன் குறிப்பிடுவது பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியர்களின் சமசுக்கிருத மொழியிலுள்ள நான்கு வேதங்களையேயாகும். ஆனால், வட ஆரியர்கள் கி மு. 3000-க்குள் தான் இந்துமதத்திற்குரிய இந்திய மண்ணிற்கு வந்தார்கள். ஆனால் 43, 73, 086 ஆண்டுகளுக்கு முன்னால் பதினெண் சித்தர்கள் தோற்றுவித்த மெய்யான இந்துமதத்தில் தமிழ்மொழியில் நான்முறைகள், நானெறிகள் நான் மறைகள், நான் வேதங்கள், 64 வகையான அருட்கலை மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், நவநாதங்கள், பதினெண் சித்தங்கள், 36 போதங்கள், 48 ஓதங்கள், (இவை 62 64, 96, என்று மூன்று வகையான எண்ணிக்கைகளையும் பெற்றிருக்கின்றன என்ற குறிப்பு குருபாரம்பரியத்தில் உள்ளது; நேமநியம நிடதநிட்டைகள், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகள்; சாத்திற சூத்திற தோத்திற அத்திறங்கள்; ஓம ஓக யாக யக்ஞ வேள்விகள்; சித்த தவ பூசை 'ஞானங்கள்;........என்ற வழிவகைகளால் .........''அகத்தில் தீ பற்றவைத்து [அகத்தில் தெய்வீகத் தீ மூட்டி''— என்ற பாட வேறுபாடு ஏடுகளில் காணப்படுகின்றது] அருளுணர்வை நிலையாகத் தக்க வைத்துக் கொள்ளும் பதினெண் சித்தர்களின் இந்து மதமே வைதீக மதம்'' என்று குருபாரம்பரிய வாசகம் இருக்கிறது

இதற்கு விளக்கமாக வை + தீ + அகம் = அகத்தில் அருட்பெரும் சுடர் பரப்பும் தெய்வீகத் தீயை மூட்டி அணையாமல் பாதுகாத்து வைத்திருக்க உதவும் சித்தர் நெறியெனும் இந்து மதம்'' என்ற மிகச் சிறப்பான விளக்கம் குருபாரம்பரியத்தில் வழங்கப்பட்டிருககினறது.

இந்து மதம் ஓர் அகல்விளக்கின் சுடரொளியாக மட்டும் இருந்து விடக் கூடாது அல்லது பயன்பட்டுவிடக் கூடாது. அது பூசைக்குரிய ஐந்தீ வேட்டலின் வேள்வித்தீயாக, யாகத்தீயாக, யக்ஞத்தீயாக, ஓமத்தீயாக, ஓகத்தீயாக, அவிர்ப் பலிகளை ஏற்றும் தீமைகளை எதிர்த்துச் சாம்பலாக்கியும்; 48 வகையான வழிபடுநிலையினர்களையும் தன்னிடத்தில் நேரில் தோன்றும்படி செய்தும் அருளுலகப் பொருளுலக இருள்களனைத்தையும் அகற்றும் அருட்பெருஞ் சோதியாக இருக்க வேண்டும் இந்தச்

தொடர்ச்சி 11-ம் பக்கம்

# 'அமாவாசை விரதமும் சுடுகாட்டுப் பூசையும்'

அமாவாசை என்பது அம் + ஆசை = அழகிய ஆசை —> வாழ்வைப் பயனுள்ளதாக, வடிவமைப்புள்ளதாக, வாய்மையுள்ளதாக மாற்றிக் கொள்ளப் பயன்படும் நாள் இது. மாதத்திற்கு ஒருநாள் தான் வரும் என்பது உலக வழக்கு. ஆனால் சித்தர் நெறிப்படி மூன்றாம் பிறை நாள், இரண்டாம் பிறை நாள், அமாவாசை நாள், அமாவாசைக்கு முந்திய நாள், அமாவாசைக்கு முந்திய நாளுக்கு முந்திய நாள் என்று ஐந்து நாட்களும் அமாவாசை நாட்களாகவே கருதப்படுகின்றன. அதாவது, மனிதன் அல்லது மனித வாழ்வு அல்லது மனித இயக்கம் என்பது மனித ஆவி + ஆன்மா + ஆருயிர் என்ற மூன்று வகைப்பட்ட தனித்த, வடிவமைப்பும், வாழ்வியலும் உடைய மூன்று வகைச் சத்திகளின் கூட்டு இயக்கமேயாகும். இந்தக் கூட்டு இயக்கம் மேற்படி, அமாவாசை நாட்களான ஐந்து நாட்களில் தான் சிறப்பாகச் செயல்படும். அதிலும் நிறைந்த அமாவாசைப் பஞ்சாங்கப்படி அந்த (24) இருபத்திநான்கு மணி நேரத்தில் தான் இந்த மூன்றின் கூட்டும் நன்றாக, சிறப்பாக, முழுமையாக, ஒன்று சேர்ந்தும், இணைந்தும், பிணைந்தும் நிகழும்! நிகழும்! நிகழும்! எனவே தான் அமாவாசை உள்ள நேரத்தில் கட்டாயமாக விரதம் இருக்க வேண்டும் என்ற நியதி அல்லது சட்டம் அல்லது விதி உண்டாக்கப்பட்டது. ஏனென்றால் இந்த விரதம் தான் முற்பிறவிகளையும் மறுபிறவிகளையும் இப் பிறவியையும் இணைக்கக் கூடிய ஒன்றாகும். இதேபோல் செத்து, மாண்டு, மடிந்து போன முன்னோர்களின் ஆருயிர் [ = செத்தவுடன் பிரிவது ஆருயிர்]; ஆவி [= செத்துச் சில ஆண்டுகள் கழித்து ஆவி தனியாகப் பிரியும் செத்தவரைப் புதைத்த அல்லது எரித்த இடத்திலிருந்து அது பிரிந்த பிறகுதான் செத்தவரை மாண்டு போனார் என்று சொல்லுவார்கள் ]; ஆன்மா [= செத்தவரைப் புதைத்த அல்லது எரித்த இடத்திலிருந்து குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு முதலில் ஆவி பிரிந்து போகும் அதன் பிறகு ஆன்மா பிரிந்து போகும். இப்படி ஆன்மாவும் பிரிந்துபோனவர்களைத் தான் செத்து மாண்டு மடிந்து போனார் என்று சொல்லுவார்கள்.] எனும் மூன்றும் மேற்படி அமாவாசை நாட்களில்தான் ஒன்று கூடி உரியவர்களின் வாரிசுகளின் வாழிடங்களுக்கு வருவார்கள். எனவே தான், அவர்களை மகிழ்விப்பதற்காக, நிறைவு செய்வதற்காக, அமைதிப் படுத்துவதற்காக, நல்ல சுமூகமான உறவு நிலையில் வைத்துக் கொள்வதற்காக மேற்படி அமாவாசை நாட்களில் விரதமிருக்க வேண்டுமென்ற நியதியும் விதியும் உருவாக்கப்பட்டன

விரதம் என்றால் பலர் பலவிதமானப் பொருளைச் சொல்லுகிறார்கள். இந்தச் சொல்லையே சமசுக்கிருத மொழிச் சொல் என்று சொல்லுகிறார்கள். பிருமணர்களின் பொய்யான ஹிந்து மதத்தில் விரதங்களில் எண்ணற்ற வகைகளும் பல்வேறு வகையான முறைகளும் கணக்கற்ற நெறிகளும் பூசாவிதிகளும் வேதங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் மெய்யான இந்துமதத்துக்குரிய மூலவர்களான காவலர்களான தமிழர்களை முட்டாள்களாக்கி அடிமைகளாக்கிச் சுரண்டுவதற்கே யாகும் இதற்காகத் தான் பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வட ஆரியர்கள் விரதம் என்ற சொல்லையே சமசுக்கிருதச் சொல்லாக

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# அன்புள்ள சேவகனுக்கு........!

இ. ம. இ. ஒரு விடுதலை இயக்கமே.

அன்புச் சேவக,

நாம் பதிப்பகம் வைத்து பல்லாயிரக்கணக்கான அறிவிக்கைகளை அச்சிட்டு அன்னை நாட்டு மக்களுக்கு பட்டி தொட்டி, குக்கிராமம் முதல் பெரிய பெரிய ஊர்கள், நகரங்கள் என்று அனைத்திடங்களிலும் எந்தவித வேறுபாடுமின்றி வழங்கி வருகின்றோம். இதில் நம்மால் சாதிவெறியோ, மதவெறியோ, வட்டாரவெறியோ ஊக்குவிக்கப்படவேயில்லை. இருந்த போதிலும், நம்மை நமது தாயக மக்களே முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாமல் தேக்கநிலை ஏற்பட்டிருக்கிறது, இதற்கு காரணம் நம்முடைய அறிவிக்கைகள் வழங்கும் தத்துவமும் சித்தாந்தமும் முழுமை வடிவில் மக்களைச் சென்றடையவில்லை என்பதுதான்.

2. மேற்படிக் கருத்தை நமது நிறுவன நிர்வாக உறுப்பினர்கள் ஆராய்ந்து 'குருதேவர்' என்ற பெயரில் நமது இயக்கத்தவர்க்கு மட்டும் வழங்குவதற்குரிய அறிக்கை ஒன்றினை மாத மலராக வெளியிடும் திட்டத்தைச் செயலாக்கினர். இதனால் இம்மாதத்தோடு (26) இருபத்தாறு மலர்கள் வெளிவந்திருக்கின்றன இது ஒரு மாபெரும் சாதனையே. இந்தியத் துணைக்கண்டத்திலேயே இப்படித் தத்துவத்தையும் செயல் சித்தாந்தத்தையும் கொள்கையையும் குறிக்கோளையும் கொள்கை விளக்க முழக்கங்களையும் இயக்கப் பாரம்பரிய வரலாற்றினையும் தெளிவாக எழுதி அச்சிட்டு கொடுத்திருக்கக் கூடிய ஒரே ஒரு இயக்கம் நமது இயக்கம் தான். உலக அளவில் பொதுவுடமைச் சித்தாந்தத்தை மேலை நாட்டினர்க்கு முதன் முதல் விளக்கிய (கீழைய நாடுகளில் பொதுவுடமைச் சித்தாந்தம் என்றென்றும் இருந்து வருகின்றது அதாவது, சித்தர்நெறி எனப்படும் இந்துமதம் தான் மிகச் சிறந்த பொதுவுடமைத் தத்துவம், கம்யூனிசம் என்பது மேலை நாட்டார்க்கு இன்னும் தெரியாது) காரல் மார்க்சு அவர்கள்தான் தமது இயக்கத்திற்குத் தத்து வத்தையும், சித்தாந்தத்தையும், கொள்கையையும், குறிக்கோளையும் கருத்து விளக்க முழக்க வாசகங்களையும் எழுதி வழங்கினர்.

எனவேதான் அது உலக முழுவதும் பரவியது. இப்பொழுது அதைவிடச்சிறந்த நமது சித்தர்நெறி[The siddha philosophy]என்கின்ற சமுதாய தத்துவம்[The social philosophy] அரசியல் தத்துவம்[The political philosophy] பொருளாதார தத்துவம் [The Economical philosophy] நம்மால் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும [Both theoretically and practically]ஓர் இயக்க வடிவமாக[In the form of a Movement] வழங்கப்பட்டு வருகிறது எனவே, நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம் [The social Renaissance Movement] ஒன்றுதான் இந்தியத் துணைக்கண்டத்திற்கும் இந்த மண்ணுலகுக்கும் வளமானவருங்காலத்தை விளைவித்து கொடுக்கும் ஆற்றலுடையது. இப்பேருண்மையினை நம்மவர்கள் நன்கு புரிந்தும் புரிய வைத்தும் செயலபடுவதை பொறுத்துத்தான் நமது வளவளர்ச்சியும், வலிவுச் செழுச்சியும் இருக்கிறது. இதற்காக நம்மவர்கள் இது வரை வெளிவந்துள்ள குருதேவர் அறிககைகளை மட்டுமாவது அடிக்கடி திருப்பி திருப்பி நன்கு படித்து, கொள்கைத் தெளிவு பெற வேண்டும்.

3. நண்ப! ஒரு காலத்தில் மதம்தான் அரசியல், கலை, இலக்கியம், மருத்துவம், தொழில், நீதி, சமுதாயச் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு முறைகள் முதலிய

அனைத்துக்கும் தலைமை தாங்கி வழி நடத்தியது. ஆனால், இந்த மதம் கடுமையான ஒழுங்கு, ஒழுக்கம், நேர்மை, நீதி, நியாயம், மனிதத்தன்மை.........முதலிய பண்பு நலன்களைச் செயலாக்கியது. எனவே இதனுடைய பிடியிலிருந்து, நேரடியான ஆட்சி யிலிருந்து தப்பித்துக் கொள்ள அல்லது முறித்துக் கொள்ள அல்லது விலகி யோடிட மேற்படி அனைத்துத் துறைகளும் மிகப் பெரிய போராட்டங்களையும் போர்களையும் செய்ய நேரிட்டது. ஆனால், அவைகள் வெற்றி பெற முடியவில்லை எனவே அவைகள் மதத்தலைவர்களின் மீதும், மதத் தத்துவங்களின் மீதும், மத வரலாறுகளின் மீதும், மத இலக்கியங்களின் மீதும், மதச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளின் மீதும், நடைமுறை களின் மீதும், சித்தாந்தங்களின் மீதும், சடங்கியல்கள் மீதும், மத நாயகர்களாக விளங்கிடும் அனைத்து வகையான கடவுள்களின் மீதும்; கண்மூடித்தனமான தாக்கு தல்களை நிகழ்த்த ஆரம்பித்தன.

4. நண்ப, இங்குதான், நாம் மிகமிக நிதானமாகவும், பொறுமையாகவும், பொறுப்பாகவும் அமைதியாகவும், அடக்கமாகவும், மிகமிகத் தெளிவாகவும் கருத்துக்களையும் செய்திகளையும் விளக்கி வழங்கிடல் வேண்டும். ஏனெனில் ஈவிரக்கமின்றி, நீதிநேர்மையின்றி...... அரசியல், கலை, இலக்கியம் சமுதாயம்...... முதலிய அனைத்துத் துறையினரும் மதத்தை மறைமுகமாகவும், நேரடியாகவும் இழித்தும் பழித்தும் கேவலப்படுத்தியும் சிதைத்தும் சீரழித்தும் முறையற்ற குறுக்கு வழிப் போரைத் தொடர்ந்து நிகழ்த்திட்டார்கள். அதன் விளைவுதான், மதம் வீழ்ச்சியுற்றது, இகழ்ச்சியுற்றது, தாழ்ச்சி பெற்றது, செல்வாக்கிழந்தது, செயல் நலம் குன்றியது. மற்ற துறைகள் மதத்தைக் கேவலப் படுத்தி யும் இழிவுப்படுத்தியும் தொடர்ந்து பேசியும் எழுதியும் வரலாயின. இதனால் மதத்தின் பிடியிலிருந்து அரசியல்வாதிகளும் ,சமுதாய வாதிகளும், இலக்கிய வாதிகளும், கலையுலக வாதிகளும், மதத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றனர்கள். இந்த விடுதலையால் இவர்கள் எல்லாவிதமான தவறுகளையும் நியாயப்படுத்தி விட்டார்கள். அதாவது களவு, கொள்ளை, காமம், நிர்வாக ஊழல், கள்ளச்சந்தை, (இலஞ்சம்) கையூட்டு முதலிய அனைத்தையும் தாங்கள் செய்யலாம், ஆனால் மதவாதி செய்யக் கூடாது என்பது போன்ற மாயா வாதத்தை உருவாக்கி விட்டார்கள். இதன்படிதான் இன்றைக்கும் மதவாதிகளைப்பற்றி மட்டுமே போலிகள், முறைகேடர்கள் என்ற குற்றச் சாட்டிற்குள்ளாக்கி வருகிறார் கள். இன்னும் சொல்லப்போனால் எல்லாத் துறையினருமே கடவுள்களையும், புராண இதிகாசங்களை யும், சாத்திறச் சம்பிறதாயங்களையும், சடங்குகளையும், ஒருசில மதவாதிகளின் சாதாரணத் தவறு -களையும் மிகமிகப் பெரிய அளவில் கேவலப்படுத்தியும் இழிவுபடுத்தியும் கண்மூடித்தனமாகத் தாக்கி விமர்சித்தும் தான் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். அதாவது

அரசியல்துறையிலோ கலைத்துறையிலோ உள்ளதலைவர்கள்கொலை,கொள்ளை கற்பழிப்பு,கள்ளச்சந்தை ஊழல் (இலஞ்சம) கையூட்டு முதலிய எவ்வளவு பெரிய தவறுகளைச் செய்தாலும அவற்றைப் பெரிது படுத்தாமல் அவைகளை எதிர்பாராமல் நிகழ்ந்தவைகளாகவும், தவிர்க்க முடியாதவைகளாகவும் விமர்சனம் செய்து நியாயப்படுத்தி வருகிறார்கள். இதனால் பொதுவாக மக்களும் மதத் துறையினரைத் தவிர மற்ற அனைத்துத் துறையினரும் எல்லா விதமான தவறுகளையும் செய்யலாம். அது குற்ற மில்லை என்று எண்ணுகின்ற மனநிலையைப் பெற்றுவிட்டார்கள். எனவே தான், இன்றைக்குப் அனைத்துத் துறையினரும் தங்களை மதமறுப்பாளர்கள், வெறுப்பாளர்கள், எதிர்ப்பாளர்கள், சீர் திருததவாதிகள், நாததிக வாதிகள், பகுத்தறிவுவாதிகள் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதிலே யே கண்ணுங்கருத்துமாய் இருக்கிறார்கள்

அதாவது, மதம் கூறுவது போல் தாங்கள் ஒழுக்கமாகவோ, நீதியாகவோ நேர்மையாக வோ வாழ வேண்டியது அவசியமில்லை என்பதாகத் தங்களுக்கு ஒரு புதிய செல்வாக்கை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். இதன்முலம இவர்கள் தங்களுக்கு மதத்தைக் கண்டிக்கவோ, திருத்தவோ உரிமையுண்டு. ஆனால் மதத் தத்துவத்திற்கும், மதத்தலைவர்களுக்கும் தங்களைக் கண்டிக்க உரிமையில்லை! இல்லை! இல்லை! என்று விளம்பரப்படுத்திக் கொண்டுளளார்கள்.எனவே தான் அரசியல் வாதிகளும, சமுதாய வாதிகளும் என்றென்றும் கோயில் நிர்வாகங்களும, மடங்களின் நிர்வாகங்களும, மதத்தின் பெயரால் உள்ள அனைத்து நிர்வாகங்களும் தங்களுக்குக் கீழேயே தங்களுக்கு அடங்கியனவாக இருக்க வேண்டும் என்று அனைத்து வகையான சட்ட திட்டச் செயல் கட்டுப்பாடுகளையும் வளர்த்து வருகிறார்கள். இந்த மாபெரும் சதித்திட்டத்திலிருந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அதற்குரிய அறிவு, ஆற்றல், செயல் திறம், தத்துவ உரம், கொள்கை வலிவு, குறிக்கோள் தெளிவு உலக அளவில் நம்மிடம்தான் இருக்கின்றது இருக்கின்றது இருக்கின்றது.

தொடரும்

உரிமைப் பாராட்டிக் கொண்டிட்டார்கள். எனவே தான், இந்த விரதம் என்ற சொல்லையே முழுமையாக விளக்கியுரைத்து, **இது ஓர் உயர் தனிச் செந்தமிழ்ச் சொல்** என்ற பேருண்மையை நிலை நாட்டிடல் வேண்டும், அதன் பிறகே, **அமாவாசை விரதம்** பற்றிய கருத்துக்களை விளக்க வேண்டும் என்று முடிவெடுக்கப் படுகின்றது.

வீரம் + தவம் —> வீரதவம் = இப்படி விரதம் என்ற சொல் வீரமாகச் செய்யும் தவம் என்ற பொருளை விளக்குகின்ற ஒரு பொருளாழமிக்க உயர்தனிச் செந்தமிழ்ச் சொல்லாகும். இனிமேல் முறையாகவும் நிதானமாகவும் பொய்யான ஹிந்து மதம் [கூறுகின்ற விரத வகைகளையும். வழிமுறைகளையும் சிந்திப்போமேயானால் விரதம் என்ற சொல்லின் பெயரால் எவ்வளவு பெரிய மோசடிகளும், பித்தலாட்டங்களும், ஏமாற்றுக்களும் அயோக்கியத்தனங்களும், காட்டுமிராண்டித்தனங்களும், ஆபாசங்களும், திசைதிருப்பல்களும், பயனற்றப் பழக்க, வழக்கங்களும், பொருளற்ற பழக்க, வழக்கங்களும் கருத்தற்ற கற்பனைகளும், பிறமண்ணினரான பிருமணர்களால புகுத்தப்பட்டு விட்டன என்ற பேருண்மை விளங்கிடும்! விளங்கிடும்! விளங்கிடும்! அதாவது, **'இந்த விரதம் என்ற ஒரு சொல்லைக் கொண்டே பொய்யான ஹிந்து மதத்தின் அவல கேவலங்களையும், மோச நாசங்களையும், சூழ்ச்சிகளையும், சுரண்டல்களையும், சதிகளையும், பயனற்ற நிலைகளையும்......மிகத் தெளிவாக விண்டுகண்டிடலாம் விளக்கியுரைத்திடலாம். அதனுல், மெய்யான இந்து மதத்தின் மறுமலர்ச்சியையும் வளவளர்ச்சியையும வலிமைச் செழுச்சியையும் உருவாக்கிடலாம், உருவாக்கிடலாம், உருவாக்கிடலாம்.''** என்று குருபாரம்பரியம் கூறுவதை இங்கு குறிப்பிட விரும்புகிறேம் யாம்.

செத்தவர்களைப் புதைப்பதும், எரிப்பதும், அப்படியே இடுகாட்டில் பிற உயிரினங்களுக்கு உணவாக விட்டுவிடுவதும்.........தொன்று தொட்டு மரபாக உள்ளன. இவற்றில் எந்தமுறை செத்தவருக்காகக் கையாளப்பட்டாலும்; அது எந்த இடத்தில் கையாளப்பட்டதோ அல்லது நிகழ்த்தப்பட்டதோ அந்த இடத்தில்தான் செத்தவருடைய ஆருயிர், ஆவி, ஆன்மா மூன்றும் அந்த குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சென்றிடும். இதைத்தவிரச் செத்தவருடைய ஆருயிரோ, ஆவியோ, ஆன்மாவோ அவர் செத்த வீட்டிற்கோ, செத்த இடத்திற்கோ அடிக்கடி வந்து செல்லும் என்ற கருத்தைச் சித்தர் நெறி ஏற்கவில்லை; ஏனெனில் ஈமக்கிரியைகள் பிணத்தைப் புதைக்கும் அன்று அல்லது எரிக்கும் அன்று நிகழ்த்தப் படுவதோடு மறு நாள் பால் தெளியல், அடுத்து (18) பதினெட்டு நாட்களுக்குள் கல்லெடுப்பு, கருமாதி, மாத தவ வாசம் + தவம் + வாசம —> தவசம் —> திவசம் [இந்தத் திவசம் என்ற சொல்லைச் சமசுக்கிருதச் சொல் என்று குறிக்கின்றார்கள், பிருமணர்கள்] ஆண்டுத் தவ வாசம் + ஆண்டுத் தவசம் —> ஆண்டுத் திவசம் என்பன செய்து முடித்தவுடன் செத்துப் போனவர்களுடைய ஆவி ஆன்மா ஆருயிர் மூன்றுக்கும் தங்களுடைய குடும்பத்தினர்களிடையேயும் உறவினர்களுக்கிடையேயுமுள்ள அனைத்து விதமான சொந்த பந்தங்களும் முற்றுப்பெற்றுவிடுகின்றன **அதாவது, முதலாண்டு தவச நிறைவுக்குப் பிறகு செத்துப் போனவர்களுடைய ஆவி ஆன்மா ஆருயிர் என்பனவற்றில் எதுவுமே தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக் கேற்ப தனது குடும்பத்தார்களின் வீட்டிற்கோ சொந்தக்காரர்களின் வீட்டிற்கோ, சென்றிட இயலாது, இயலாது இயலாது** இயலவே இயலாது அதுமட்டுமல்ல இதுதான் அருளுலகத்தின் சட்டம், இந்தச் சட்டத்தை மீறி ஆண்டுத் தவச நிறைவுக்குப் பிறகு எந்த செத்தவருடைய ஆவியோ, ஆன்மாவோ, ஆருயிரோ தமது சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப தங்களின் குடும்பத்தார்களின் வீட்டிற்கோ அலலது சொந்தக்காரர்களின் வீட்டிற்கோ செல்லக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது என்பதுதான் அருளுலகின் சட்டம், கண்டிப்பான விதி. உண்மையான நீதி. ஆனல், செத்துப்போனவர்களுடைய குடும்பத்தார்களோ அல்லது சொந்தக்காரர்களோ அமாவாசை நாட்களில் மட்டும் (ஏற்கனவே குறிப்பிடப் பட்ட ஐந்து நாட்களில் மட்டும்) வீரதவமிருந்து (விரதம்) வேண்டி விரும்பியழைக்கும்போது செத்தவர்களின் ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றுமே கூட அந்த வீட்டிற்கு வருகை புரிந்திடலாம், என்பது தான் அருளுலகச் சட்டம்.

-தொடரும்

# விநாயகர் - விக்னேசுவரர் - கணபதி - பிள்ளையார் - 2

—ஞாலகுரு

இந்து மதத்தில் நான்கு யுகங்களாகவே சந்தேகத்துக்குரிய குற்றவாளியை ''சுண்ணாம்புக் காலவாயில் வைத்து எரிப்பது கழுத்து வரை தரையில் புதைத்து யானையை விட்டு தலையை மிதிக்கச் சொல்லுவது 3 கருங்கல்லின் மீது படுக்க வைத்து சங்கிலியால் கட்டிக் கடலுக்குள் போடுவது; 4. கொடிய நஞ்சைக் கொடுத்துப் பருகச் சொல்லுவது; 5 சிலுவையில் அடித்து சாகும் வரை சிலுவையிலேயே தொங்கவிடுவது என்ற ஐந்து விதமான தண்டனை வழங்கும் முறை இருந்து இருக்கிறது இதுவே ஐந்திறத்தண்டனை என்று நமச்சிவாய விளக்கம் என்ற தலைப்பில் குருபாரம்பரியத்தில் குறிக்கப்படுகின்றது எனவே சந்தேகப்பட்டவர்களை சிலுவையில் வைத்து அடித்து கொல்லப்படுவது இந்து மத மரபேயாகும். இந்த சந்தேகங்களையெல்லாம் அகற்றி நல்லத் தெளிவை கொடுக்கக் கூடியவர் வினையின் நாயகர் விநாயகர்தான் எனவேதான் விநாயகர் சிலையின் பின்னாலும், படத்தின் பின்னாலும் சிலுவைக்குறியோ அல்லது அதன் சுருங்கிய வடிவமான சொசுதிக் சின்னமோ குறிக்கப்படுவது மரபாயிற்று

ஆவி, ஆன்மா, ஆருயிர் இம்மூன்றையும் குறிக்கும் இலிங்கச் சின்னம் இந்து மதத்தின் முழுமுதற் பொருளான சிவபெருமானை குறிக்க நேரிட்டுவிட்டது. எனவே தான் முதல் யுகத்தில் (திரேதாயுகம்) வாழ்ந்த பல சிவபெருமான்களில் ஒரு சிவபெருமானின் மகனாகத் தோன்றிய பிள்ளையாரை இலிங்கச் சின்னத்தோடு சேர்த்தே, சிலையாகவடிப்பது, ஓவியமாகத் தீட்டுவது என்ற மரபு தோன்றிவிட்டது. அதுவே காலப்போக்கில் இலிங்கச்சின்னம் (அ) ஓவியம் வரைந்து அதற்கு முன்னால் பிள்ளையாரின் படம (அ) சிலை வைக்கும பழக்கம் தோன்றிவிட்டது. அதாவது 'இலிங்க வடிவிலிருக்கும சிவபெருமானின் மகனே பிள்ளையார்' என்ற மாபெரும் கருத்தை விளக்குவதற்காகவே பிள்ளையார் படத்திற்குப் பின்னால் இலிங்க வடிவப் படமும் பிள்ளையார் சிலைக்குப் பின்னால் இலிங்கச்சிலையும் இடம்பெறும் மரபு தோன்றிவிட்டது. இந்த இலிங்க வடிவமே சுருக்க வடிவமாகச் சிலுவை [The Cross Symbol] வடிவமாகவும், சொசுதிக் சின்னமாகவும் [Swasthik Symbol] வடிவம் பெற்றன. அதாவது இந்தச் சிலுவைக்குறியே சுருங்கி சொசுதிக் சின்னமான பிறகு பிள்ளையார் சுழியாக மாறிவிட்டது. எனவே தான், பிள்ளையார் சுழி போடாமல் யாருமே எதையுமே எழுதத் தொடங்குவதில்லை என்ற மரபும் நம்பிக்கையும் வேரூன்றி விட்டது ஏனெனில் இந்த பிள்ளையார் சுழி பிள்ளையாரையும் குறிக்கிறது பிள்ளையாரின் தந்தையான சிவபெருமானையும் குறிக்கிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக சீவன் எனப்படும் ஆவி, ஆன்மா, ஆருயிர், மூன்றின் நினைவும் இந்த பிள்ளையார் சுழியில் அடங்கியுள்ளது. எனவே தான் இந்தப் பிள்ளையார் சுழி மிகப் பெரிய மதிப்பையும் முதன்மையும் பெற்றுவிட்டது'' —என்று கருவூரர் வழி வந்த கண்டப்பகோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் குறிக்கின்றார்.

கணபதியைப் பற்றியும், விநாயகர் பற்றியும், விநாயக புராணம், கணேச கல்பம், கணேச சார சந்திரிகை, கணேச கீதை, கணேச தந்தி, 6. கணேச காண்டம், 7. கணபதி உபநிடதம், (கணபதி இணை நிடதம், கணபதி துணை நிடதம்,) 8. கேசம்ப உப நிடதம் 9 கணேச புராணம் என்ற நூல்கள் விரித்துரைக்கின்றன.

(தொடரும்)



# இந்தியாவில் மார்க்சீயம் - 9

**—சித்தர்**

1867 ஆம் ஆண்டு சூலை 25-31 வரை நடைபெற்ற 'செனீவா' முதலாவது இண்டர் நேசனல்' மாநாட்டில, அதில் கலந்து கொள்ளப் போகும் (செனரல் கவுன்சில் பிரதி நிதிகள் பொதுக் குழு உறுப்பினர்) பிறதிநிதிகள் என்னென்ன செய்ய வேண்டும்.............என்ற விவரங்களைக் கார்ல் மார்க்சு எழுதினா. இது அவருடைய உலகக் கண்ணோட்டம், உலகத் தொழிலாளர் இயக்கச் செயல் முறைச் சிந்தனை........முதலியவைகளை விளககிற்று. இதனால் எதிரிகளும் மனத்தளவிலாவது மார்க்சின் நெறியை ஏற்றுக் கொள்ள நேரிட்டது.

1867-ஆம் ஆண்டில் மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. ஆம்! ஏப்பிரல் 10-இல் மார்க்சு இலண்டனிலிருந்து 'கேம்பர்க்' சென்று 'மூலதனம்' என்னும் புகழ் பெற்ற நூலின் முதல் பகுதியைப் பதிப்பகத்தாரிடம் கொடுத்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு மே-19 இல் திரும்பினர் இதன் பயனை ஆகசுட்டு 16-ஆம் தேதி இரவு இரண்டு மணிக்கு இந்த 'மூலதனம்' முதல் தொகுதியின் கடைசிப் பக்கம் 'பதிப்பு நகலை' சரிபார்க்கப்பட்டு அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டது. அப்போது, மாரக்சு உடனே தனது நண்பர் எங்கெல்சுக்கு அஞ்சல் எழுதினர் அதில்...........

நண்ப! ஒரு வழியாக இந்த முதல் பாகம் முடிந்தது. இதற்கு நீ ஒருவன்தான் முழு முதற் காரணம் இதற்குரிய என் நன்றியை ஏற்றுக் கொள். நீ மட்டும் எனக்காக இந்தப் பெரிய ஈகங்களைச் (தியாகங்களை) செய்திராவிட்டால்: நான் இந்த நூலைத் தயாரித்திருக்கவே முடியாது. இந்த நூலின் மூன்று பாகங்களும் உன் உதவியால் தான் பிறந்தன இதற்காக நான் உன்னை நன்றி நிறைந்த வணக்கத்தோடு தழுவிக் கொள்கின்றேன். என் அரிய, வாய்மைமிக்க, உயரிய நண்பனே உன்னை வாழ்த்துகிறேன்; நன்றி மிக்க உணர்வால் பாராட்டுகின்றேன்''...... என்று எங்கல்சை உணர்வு மிகுந்த நிலையில் பலபடப் புகழ்ந்து உரைக்கின்றார். தன்னுடைய வறுமையிலும் கார்ல் மார்க்சின் குடும்பத்தார்களையும், குழந்தைகளையும் தன்னுடைய உறவு, குடும்பம் போலவே நினைத்து அவர்களுக்காக உழைத்து உழைத்து உழைப்பின் பெரும் பகுதியை மான் செசுட்டரிலிருந்து இலண்டனிற்கு அயராது தொடர்ந்து அனுப்பி வந்தார் நண்பன் என்று ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக அவர் துயரங்களையேற்றார். அந்தத் துயரங்கள் வெறும் மனித உணர்வின் அளவில் மட்டுமின்றி, மனித குல நன்மையின் பொருட்டும் காலம் காலமாக அடிமைப்பட்டு அறியாமை இருளில் மூழ்கித் திளைத்து வரும் மக்களுக்கு விடுதலைப் பாதையை ஆழ்ந்த அறிவாய்ந்த ஆராச்சியடிப்படையில் அமைக்கவும் எண்ணங் கொண்டு உழைத்து வரும் மார்க்சின் உணர்வுகளோடு உணர்வுகளாய் நெஞ்சத்தோடு நெஞ்சமாய் இரண்டறக் கலந்ததாலும் தான். மார்க்சு, எங்கல்சு தன்னலங்கருதாது தனக்களித்த உதவிக்கு நன்றி தெரிவித்து எழுதிய அஞ்சல் உலகப் புகழ் பெற்றதாகும்.

பின்பு செப்டம்பர் 14-ஆம் தேதியன்று 'கேம்பர்க்கில்' மூலதனத்தின் முதல் பகுதி வெளி வந்தது இந்நூல்.........'தனித்துத் தனித்து நிற்கும் விளக்கங்களையோ, சூத்திறங்களையோ கொடுக்கவில்லை மாறாக சின்னஞ்சிறு வேற்றுமைகளையும நுண்ணிய சாயல்களையும் எடுத்துக்காட்டி அலசி ஆராயும் பாங்குகளைக கொண்டுள்ளது முதலாளித்துவ உற்பத்தி முறையினால் ஆதிக்கம் செலுத்தப்படும் சமூகததின் செல்வம் பிரமாண்டமான அளவுக்குக் குவிததிருக்கும் பண்டங்களே! .........என்ற சாதாரண உண்மையை எடுத்துக்கூறி மார்க்சு தனது நூலைத் துவக்குகின்றார்..... ... 'தனது படைப்புக்களைப் பற்றி மார்க்சு மிகமிக மன நேர்மையுடன் அக்கரைக் காட்டி வந்தார.

-தொடரும்

'மெய்யான இந்துமதமும் பொய்யான ஹிந்துமதமும் வரிசையில்.....



# இராமலிங்கரியலும் இராமகிருட்டிணரியலும் - 2

**இந்து மதத் தந்தை**

கார் மேகங்களால் மூடப்பட்டிருந்த மெய்யான இந்து மதமெனும் கதிரவன் ஒளி எங்கும் பரவத் தொடங்கியிருக்கிறது இனியாவது உடனடியாக மெய்யன்பர்கள் அருளுலக அநுபவங்களைப் பெற்றிட வாய்மைமிகு தெய்வத்தமிழால் மெய்யான இந்து மதத்தைச் செயலாக்கிட குருதேவர் ஞானாச்சாரியார், அரசயோகி, அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், அருளாட்சி நாயகம், இந்து மதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களையும் அவர்கள் உருவாக்கியுள்ள பல்லாயிரக் கணக்கான சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும், நூற்றுக் கணக்கான அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களையும், அருட் கோட்டங்களாக ஆக்கியுள்ள சுடுகாடு, இடுகாடு, புதைகாடு.........முதலிய 18 வகைக் காடுகளையும் புதிதாக நிறுவனம் செய்துள்ள 40 க்கும் மேற்பட்ட கருவறைகளையும் உலகெங்கும் புத்துயிர்ப்புச் செய்துள்ள எண்ணற்ற அனைத்து மத வழிபாட்டு நிலையங்களையும் நன்கு பயன் படுத்தி உய்வு பெற வாரீர்! வாரீர்! வாரீர்!

8 தென்னாட்டு இராமலிங்கரை, வடநாட்டுக்கும், வடநாடு கடந்த வெளி நாட்டுக்கும் கொண்டு போவதென்பது எளிய காரியமல்ல. எனவே வெளிநாடுகளிலும் உள்நாட்டின் பல பகுதிகளிலும் நன்கு அறிமுகமாகியிருக்கின்ற இராமகிருட்டிணரை தமிழகம் முழுவதும் அறிமுகப்படுத்தி அருளுலக மலர்ச்சியின் வளர்ச்சிப் பணிக்கு உறுதுணையாக்கிடலாம். அதாவது காளிதேவியின் சித்தியாளரான அருளூற்று நிலையினராக வாழ்ந்த இராமகிருட்டிணப் பரம அம்சரின் வாழ்வியல்களையும் போதனைகளையும், சாதனைகளையும் நமது வடலூர் அருட்பெருஞ் சோதி வள்ளல் பெருமானின் முருகபத்திப் பாடல்களிலும் வடிவுடைய மாணிக்க வல்லிப் பாடல்களிலும் சிவபெருமான மீது பாடப்பட்ட பத்திப் பாடல்களிலும் இணைத்து வணங்க வேண்டும். அப்பொழுது தான் இருவரும் அருளுலகின் சூரிய சந்திரர்களாக விளங்கி அருளொளிப் பயனை மானுடர் பெறச் செய்திட முடியும்.

அதாவது, வடலூர் இராமலிங்க அடிகளாரையும், வடநாட்டு இராமகிருட்டிண பரம அம்சரையும் வறட்டு வேதாந்திகளாகவோ, கதைக்குதவாத கற்பனை வாதிகளாகவோ சித்தரித்துக் காட்டும் அத்வைத மாயைகளிலிருந்து, அதாவது வடஆரிய வேதமத மாயைகளிலிருந்து விடுவித்திடல் வேண்டும். இதற்காக, **''இவர்கள் இருவரும் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதப்படி உருவ வழிபாட்டைச் செய்தே சத்தி, சித்தி, முத்தி, ஆகியவற்றைப் பெற்றார்கள்! பெற்றார்கள்! பெற்றார்கள்!''** — என்ற பேருண்மையைப் படிப்பறிவில்லாத பாமரமக்களுக்கு விளக்கியுரைத்திடல் வேண்டும்.

அப்பொழுதுதான் இத்திரு நாட்டு மக்கள் சாதிவெறி, மதவெறி, தீண்டாமைக்கொடுமை, ஏற்றத்தாழ்வு கொடுமை, நாத்திக அநாகரிகம், பகுத்தறிவு மோசடி, நாகரிக மோகம்.........முதலிய தீமைகளிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்! விடுவிக்கப் படுவார்கள்! விடுவிக்கப் படுவார்கள்! காப்பாற்றப் படுவார்கள்! காப்பாற்றப் படுவார்கள்! காப்பாற்றப் படுவார்கள்! அதாவது இராமலிங்கரும், இராமகிருட்டிணரும் சித்தர் நெறிச் செல்வர்களே! — என்ற பேருண்மைதான் அனைத்து வெறிகளையும் அகற்றும்! அகற்றும்! அகற்றும்! —முற்றும்

---



## எத்தனை ஐயப்பன்கள்! - 4

—இந்துமதத் தந்தை

இல்லற வாழ்வியலின் சட்டதிட்டக் கட்டுப்பாட்டுக்குள் வாழும் சிருஅர் முதல் பெரியவர் வரை வழிபட்டு பத்தி, சத்தி, சித்தி, முத்திகளில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாகவும், வாயிலாகவும், வழியாகவும்.........இருக்கக் கூடியது ஊர் தோறும் இருக்கக் கூடிய ஐயனாரே இது, இல்லறவழியில் நிறைவு கண்டோரின் சமாதியேயாகும்.

(II) 'விண்ணுலக நிலைகளையும் இன்பங்களையும் இல்லறங்கடந்த ஞானங்களையும், உலகியல் துறந்த சித்திகளையும், மறுபிறப்புப்பயன்களையும், மறுமையுலகப் பயன்களையும், மலைமுகடுகளில் சமாது பெற்றுள்ள இல்லறமற்றுச் சித்தி முத்தி பெற்ற ஐயப்பன் வழிபாட்டால் தான் பெறமுடியும், சாதிக்க முடியும், அடைய முடியும்' எனவே, இல்லற இன்பம் துய்க்காத, அல்லது, துய்த்து வெறுத்து மறுத்திட்ட சிருஅர் முதல் பெரியவர் வரை வழிபட்டுப் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாகவும், வாயிலாகவும், வழியாகவும் .........இருக்கக் கூடியது...... மலைகள் தோறும் இருக்கக் கூடிய ஐயப்பனே!.. இது, பெண்ணை மறந்தும் துறந்தும் மறுத்தும வெறுத்தும் உலகியல் கடந்த வழியில் நிறைவு கண்டோரின் சமாதியே யாகும்.

(III) அவரவர், அவரவர் ஊரருகில் உள்ள ஐயனார்களைப் பத்திசெய்து சத்தி, சித்தி, முத்தி, பெற்றாலே போதும். இத் தத்துவத்தால்தான்; பதினெண் சித்தர்கள், இல்லறத்தார் எளிதில் சித்தி முத்திகளால் ஐயனார் நிலை அடைவதற்குரிய வழிவகைகளும் சத்தி நிலைகளும கருவழி, குருவழி, தருவழி, திருவழி...... எளிதாகக் கிடைத்திடுமாறு இந்துமதத்தைப் படைத்திட்டார்கள் ஆனால், இந்து மத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களே மறதியாலும், சோம்பலாலும், ஏமாளிகளாகி இந்துமதத்தையே தெரியாத புரியாத நிலையினை எய்தி விட்டார்கள்... .....இதற்குச் சித்தர்களின் கதைகள், காதைகள், கவிதைகள் (காப்பியங்கள்), கீதைகள் எனும நான்கு (வகை) நெறி இலக்கியங்களும்; இருபத்தேழு வண்ண இலக்கியங்களும் மலர்ச்சி பெற்றேயாக வேண்டும். சித்தர்களின் இலக்கிய மறுமலர்ச்சியே இந்துமதச் செழிச்சி மீட்சியாகும்.........'' — என்று கூறுகிறார்

(தொடரும்)

**உ-ம் பக்கம் தொடர்ச்சி**

சோதி ஏமச்சோதியாக, காமச் சோதியாக, சோமச்சோதியாக, வாமச்சோதியாக வளர்ந்து ஏமகோடிப் பீடம், காமகோடி பீடம் சோமகோடி பீடம் வாமகோடிப் பீடம் என்ற நான்கு பீடங்களை உருவாக்குகிறது.........'' என்று குறிப்பிடுகின்றார்.
10-வது பதினெண் சித்தர் பீடாதிபதி எனவே
வைதீகம் என்ற சொல் இன்றுள்ள பிருமணர்க்குரிய பொய்யான ஹிந்துமதத்திலுள்ள வேதத்தினடிப்படையாகப் பிறந்த ஒரு சொல் அல்ல! அல்ல!! அல்ல!!! அல்லவே அல்ல— என்ற கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்தி திரு பகீரதன் அவர்களுக்கு தமது மறுப்பைத் தெரிவித்துக் கொள்கிறார் எங்களது குருதேவர்.

''......ஆனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதைத் தழுவிக் கொண்ட சைவமும் வைணவமும் நன்கு பரவிவிட்டன'' **மறுப்பும் விளக்கமும்:** இதில் சைவ மதத்திற்கும், வைணவ மதத்திற்கும் முன்பே தோன்றிய ஒன்றே பிருமணர்களின் வேதமதம் என்ற கருத்து வெளிப்படுகின்றது. இதுதவறு. சைவம் என்றமதம் சிவனை வழிபடுகின்ற மதம் என்று பொருள்படும் அதாவது, சிவநெறி என்பது சீவநெறி [=ஆவி+ஆருயிர்+ஆன்மா பற்றிய நெறி] என்பதை அடிப்படையாகக் கொண்டதே யாகும். ஏனென்றால் 'சிவனை வழிபடும் சிவ நெறியே சைவநெறி' என்பதே குரு பாரம்பரிய விளக்கம். பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் (கி.மு. 100 முதல் கி.பி. 150 முடிய) குருபாரம்பரிய வாசகத்தில், ''...மரக்கறி உணவுண்டு இறைச்சி -யுணவை மறுத்தும் வெறுத்தும் சிவபூசை செய்பவர்களைச் சைவர் என்று கூறும் மரபு தவறான மரபு. ஏனெனில் சிவபூசை என்பது குருதிப்பலியும் பல்வேறு வகையான இறைச்சியின் அவிர்ப்பலியும் இடம்பெறக் கூடிய ஒன்றாகும்'' இதுபற்றி 'இறைச்சி யும் இறையும்' என்று இவரும் இவருக்குப் பின் வந்த 11வது பதினெணசித்தர் பீடாதிபதியும் [கி.பி. 785 முதல் 1040 முடிய] எழுதியுள்ள குருபாரம்பரிய வாசகங் கள் நிறைய உள்ளன. எனவே, பிருமணர்களின் வேதமதத்துக்குப் பின்புதான் சைவ மதம் தோன்றியது என்று கூறுவது தவறு. இதே போலத்தான் திருமாலை வழிபடும் வைணவமதம் முதல் உகத்திலிருந்தே வழக்கத்திலிருந்துவருகின்ற ஒன்று என்பதால்; அது, கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்குள் வந்த பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் **வட ஆரியரின்*** [*ஆரியர் என்றசொல் ஏற்கனவே இந்து மதத்தில் ஆரம்ப காலத்திலிருந்து நான்கு உகத்திலும் இருந்து வருகின்ற காரணத் தினால் கி. மு. 3000-க்குள் வெளிநாட்டிலிருந்து வந்த பிருமணர்களைத் தனித்து வேறுபடுத்திக் காட்டிடவே, அவர்களைக் குறிக்க வடஆரியர் என்றசொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது] வருகைக்குப் பிறகு தோன்றிய வைதீக மதத்தின் அடிப்படையில் இருந்து தோன்றியது என்று கூறுவதுதவறு அன்பு கூர்ந்து திருந்தவும்.

★ ★ ★

தொடர்பு:- தலைமைப் பொறுப்பாளர், சி. கவிக்குமார் B.Sc.,
56, N G O காலனி, பொன்னேரி 601204.

## அருள்மிகு வீரமாகாளி சன்னிதானத்தில் (குருகுலத்தில்) அமுத (அட்சய) ஆண்டில் நடைபெறும் பருவப் பூசை நாட்கள் பற்றிய குறிப்பாணை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 23—4—1986 | புதன்கிழமை | சித்திரை | 10-ந் தேதி | 147-வது | பூசை |
| 2. | 23—5—1986 | வெள்ளிக்கிழமை | வைகாசி | 9-ந் ,, | 148-வது | ,, |
| 3. | 20—6—1986 | வெள்ளிக்கிழமை | ஆனி | 6-ந் ,, | 149-வது | ,, |
| 4. | 20—7—1986 | ஞாயிற்றுக்கிழமை | ஆடி | 4-ந் ,, | 150-வது | ,, |
| 5. | 18—8—1986 | திங்கட்கிழமை | ஆவணி | 2-ந் ,, | 151-வது | ,, |
| 6. | 16—9—1986 | செவ்வாய்க்கிழமை | ஆவணி | 31-ந் ,, | 152-வது | ,, |
| 7. | 17—10—1986 | வெள்ளி ,, | புரட்டாசி | 31-ந் ,, | 153 வது | ,, |
| 8. | 14—11—1986 | வெள்ளி ,, | ஐப்பசி | 28-ந் ,, | 154-வது | ,, |
| 9. | 14—12—1986 | ஞாயிற்றுக் ,, | கார்த்திகை | 28-ந் ,, | 155-வது | ,, |
| 10. | 13—1—1987 | செவ்வாய் ,, | மார்கழி | 29-ந் ,, | 156-வது | ,, |
| 11. | 12—2—1987 | வியாழக் ,, | தை | 30-ந் ,, | 157-வது | ,, |
| 12 | 13—3—1987 | வெள்ளிக் ,, | மாசி | 29-ந் ,, | 158-வது | ,, |
| 13 | 12—4—1987 | ஞாயிற்று ,, | பங்குனி | 29-ந் ,, | 159-வது | ,, |

குறிப்பு:- அருள்மிகு வீரமாகாளி சன்னிதானத்தில் பருவ பூசை நடைபெறும் நாட்களில் வேறு எங்கும் பருவபூசை நடைபெறுது.எனவே, எல்லா மாவட்டத்தார்களும், இ. ம. இ; அ வி. தி. யைச் சேர்ந்த அடியான்களும், அடியாள்களும், அடியார்களும், ஆதரவாளர்களும், விருப்பாளர்களும், பற்றுளர்களும், ..........வீரமாகாளி சன்னிதானப் பருவ பூசைகளில் கலந்து நற்பயன் பெறுவீர்களாகுக! பருவ பூசை இரவு 8-00 மணிக்கு ஆரம்பமாகிவிடும்

# குருபாரம்பரியம் கூறும் தெய்வீக மருத்துவம்

ஊழ்வினையும் விதியும் தொடர்ந்து நிழல் போலவே வரும் என்பதால் சித்தர் நெறிப் பூசைகளால் மட்டுமே ஒரு குறிப்பிட்ட அளவு (முழுமையாக அல்ல) நன்மையை, துன்ப நீக்கத்தை, உடல்வளத்தை, தோல்வி மாற்றத்தை, இழப்புத் தடுப்பை.........உருவாக்க முடியும். அதுவும் 9 (ஒன்பது) பருவபூசைகள் கழிந்த பின்பே (நவகிரகங்கள்) நலம் விளைய ஆரம்பிக்கும். அதற்குப் பிறகு 12 மாதங்கள் அதாவது பருவபூசைகள் கழித்தே (இராசிகள்) துன்பங்களும் தோல்விகளும் தொல்லைகளும் ஓரளவு தடைப்படும். இந்தத் தடுப்பும் நன்மை விளைவும் அவரவர் யோகத்திற்கும் நம்பிக்கைக்கும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் ஏற்பவே சிறுகச் சிறுக 27 பருவபூசைக் காலங்களில் வளர்ச்சி பெற்று ஒரு நிலையில் நிற்கும். (27 விண்மீன்களின் அல்லது நட்சத்திரங்களின் கால அளவு) அதற்கு மேல் நலம் விளைவதில் வளர்ச்சியிருக்காது. அதே நிலையில்தான் நீடிக்கும். இதுதான் குருபாரம்பரியம் கூறுகின்ற தெய்வீக மருத்துவ உண்மை. யோகம் இல்லாதவர்கள் புதுப்புனல் ஓடும் ஆற்றுடன் கோபித்துக் கொண்டு நீராடாமல் போகிறவர் போல அருளாளர்களுடன் வருத்தப்பட்டுக் கொண்டு தாங்களாகவே தெய்வீக மருத்துவத்திலிருந்து விலகிச் சென்று விடுவார்கள்.

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி